**16.04.2025.** CC. 223/2010 PW.6 திரு. ஜான் மகேஷ்

**கடந்த 13.11.2024 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 14/2024, dated 18.12.2024 ன் படி குவி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை** : **1, 3, 4, 5 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மையானது கு.வி.மு.ச பிரிவு 317(1)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா1 எனது தந்தை. சம்பவமானது 01.03.2019 ம் தேதி மாலை 04.45 மணிக்கு நடைபெற்றது. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் 04.00 மணி என்று சொல்லலியுள்ளேன் என்றால் 04.00 லிருந்து 04.45 மணிக்குள். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

2. அந்தோணி ராஜ் எனது சகோதரர் தான் தகவல் சொன்னார் என்றால் சரிதான். நான் ஜேம்ஸ் மருத்துவமனைக்கு தான்சென்றேன் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.